# அமைச்சுக்களின் மட்டத்தில்

# அரசகரும மொழிக் கொள்கை அமுலாக்கம்

# தொடர்பான ஆய்வு 2017

சாராம்ச அறிக்கை

# உள்ளடக்கம்

ஆய்வுப் பின்னணி ....................................................................................................................................3

நோக்கம் ....................................................................................................................................4

செயன்முறை ....................................................................................................................................4

ஆய்வின் எல்லைகள்....................................................................................................................................6

அரசகரும மொழிக்கொள்கை அமுலாக்கம் தொடர்பான நேர்மறை முன்னெடுப்புக்கள்.........................................7

அரசகரும மொழிக் கொள்கை அமுலாக்கம் தொடர்பான அடிப்படைப் பிரச்சினைகள் ....................................... 8

யோசனைகள் மற்றும் பரிந்துரைகள் .................................................................................................... 15

இணைப்பு 1– அ.க.மொ.கொ.க்கு தொடர்புடைய சுற்றுநிருபங்கள்/ ஒழுங்கு விதிகள் .........................................20

இணைப்பு 2 — ஆய்விற்குட்படுத்தப்பட்ட அமைச்சுக்கள் ..............................................................................24

# ஆய்வுப் பின்னணி

மனிதனின் பிரதான தொடர்பாடல் சாதனமாக அமைவது மானுட மொழியாகும். தற்போது ஒவ்வொரு மனிதனது வாழ்க்கை மற்றும் வாழ்வியல் முறையை சுற்றியமைந்த சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் கலாசாரத்துடன் தொடர்புடைய விடயமாக மானுட மொழி விருத்தி பெற்றுள்ளது. அதே சமயம் வளர்ச்சி பெற்ற சமூகமொன்றில் மானுடனின் அடிப்படை மனித உரிமைகள் மற்றும் சுயகௌரவத்துடன் இணைந்த அம்சமொன்றாக மொழி முதன்மை பெறுகின்றது. மேற்குறிப்பிட்ட வரைவிலக்கணத்திற்கு அமைய நோக்கும் போது, இலங்கையில் அனைத்து பிரஜைகளுக்கும் சனநாயக நல்லாட்சியின் சமமான பயனை அனுபவிப்பதற்கு வழிவகுக்கும் வகையில் நல்லிணக்கம், ஒருமைப்பாடு, சகவாழ்வு மற்றும் சமாதானம் போன்றவற்றை உண்மையாக சமூகமயப்படுத்துவதற்கு, மொழி எனும் அடிப்படை விடயம் தொடர்பில் அரசியல் மற்றும் கொள்கை ரீதியான நிலைப்பாட்டை சரியான முறையில் அமுல்படுத்தல் மிகவும் கட்டாயமானதாகும்.

இந்நாட்டின் அரசகரும மொழிகள் தொடர்பில் ஒட்டுமொத்த சட்டவாக்க மற்றும் கொள்கை ரீதியான கட்டமைப்பை எடுத்துக்காட்டும் தற்போதைய 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பில் 3ஆம் அத்தியாயத்தில் சமத்துவம் பற்றிய 12(2) ஆம் உறுப்புரையின் பிரகாரம், “எந்தவொரு பிரஜைக்கும் இனம், மதம், மொழி, சாதி, பால், அரசியல் கொள்கை அல்லது பிறப்பிடம் காரணமாக அல்லது அத்தகைய எந்தவொரு காரணங்களுக்காகவும் எந்தவொரு பிரஜையையும் ஓரங்கட்டலாகாது.” மேலும் அரசியமைப்பின் மொழி உரிமை தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ள நான்காவது உறுப்புரை, 18ஆவது அரசியலமைப்பின் கீழ் “அரசகரும மொழி சிங்களமாகும்” மேலும் 13வது சீர்திருத்தத்தின் பிரகாரம் தமிழ் மொழியும் அரசகரும மொழியாகும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கமைய பல்லின கலாசார மற்றும் மதப் பின்னணியைக் கொண்ட இலங்கை போன்ற ஒரு நாட்டின்சமூகப் புரிந்துணர்வு, பன்மைத்துவம் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு போன்ற அடிப்படை விடயங்களை நிலை நாட்டுவதற்கு உமது உயரிய முழு அர்ப்பணிப்பை ஒருங்கிணைப்பு எடுத்துக்காட்டும் சட்ட பூர்வமான பொறுப்பு அரசுக்கே உள்ளது. மொழி எனும் விடயப் பரப்பு மற்றும் அதனுடன் இணைந்த அரசியலமைப்பு மற்றும் ஏனைய கொள்கை ரீதியான ஏற்பாடுகள் மூலம் மொழி தொடர்பாக இருக்க வேண்டிய தொலைநோக்கு மிகத் தெளிவாகக் காணப்பட்டாலும், எம் நாட்டின் அனைத்து பிரஜைகளும் எதிர்பார்க்கும் வேண்டிக் கொள்ளும் நல்லிணக்கத்தையும் ஒருமைப்பாட்டையும் உதயமாக்கும் அடையாளமாக குறிப்பிட்ட ஒவ்வொரு அமைச்சுக்களிலும் அரசகரும மொழிக் கொள்கையை அமுல்படுத்தும் இயல்பை அவதானித்தல் முக்கியமாகும்.

இலங்கையில் அரசகரும மொழிக் கொள்கையை சரியான முறையில் அமுல்படுத்துவதற்கு அனைத்து அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாண மற்றும் பிரதேச நிர்வாகப் பொறிமுறைகள் போன்ற அனைத்து நிறுவனக் கட்டமைப்புக்களின் ஒத்துழைப்பும் பங்களிப்பும் அத்தியாவசியமாகும். அதனடிப்படையில் அரசகரும மொழிக்கொள்கையை சரியான முறையில் அமுல்படுத்தும் பொறுப்பு 2009.09.25 ஆம் திகதிய 1620/27 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 2009.11.25 திகதி 18/2009 இலக்க சுற்றுநிருபத்தின் மூலம் குறித்துரைக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சு மூலம், 'அரச நிறுவனங்களில் மொழித் திட்டம் தயாரிக்கும் வழிகாட்டல் கைந்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட வழிகாட்டல் கைநூல்' மூலம் நிறுவனங்களில் அரசகரும மொழிக் கொள்கை சரியான முறையில் அமுலாக்கத்தை உறுதிப்படுத்துவது தொடர்பான நான்கு பிரதான துறைகள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது. அவையாவன 1) அரசகரும மொழிக் கொள்கையின் அமுலாக்கத்தை பிரதிபளித்தல், 2) நிருவாகமும் ஆவணங்களைத் தயார்படுத்தலும், 3) சேவை வழங்குதல், 4) நிறுவன ரீதியான அர்ப்பணிப்பும் உதவிப் பொறிமுறை, போன்றவையாகும். அரசகரும மொழிக் கொள்கையை உரிய முறையில் அமுல்படுத்தும்போது மேற்குறிப்பிட்ட முக்கிய துறைகளின் கீழ் இவ் அமைச்சின் செயற்பாடுகள் இடம்பெறும் விதம் தொடர்பிலும், குறிப்பிட்ட துறைகளில் குறித்துரைக்கப்பட்ட அமைச்சு முகங்கொடுக்கும் பிரச்சினைகள் மற்றும் சவால்கள் பற்றிய தகவல்களை ஒன்றுதிரட்டுதலே இவ் ஆய்வு மூலம் இடம்பெறுகிறது.

## நோக்கம்

இவ் ஆய்வின் பிரதான நான்கு நோக்கங்கள் பின்வருமாறு:

- அமைச்சுக்கள் மட்டத்தில் அரசகரும மொழிக் கொள்கை அமுல்படுத்தலின் தற்போதைய நிலை மற்றும் குறிப்பிட்ட அமைச்சுக்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் பற்றி கவனம் செலுத்தல்.
- தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சின் முழுமையான தொழில்நுட்ப வழிகாட்டலின் கீழ், குறிப்பிட்ட ஒவ்வொரு அமைச்சுக்களிலும் மொழித்திட்டம் தயாரிப்பதற்கு தேவையான பின்னணியை உருவாக்குதல்.
- அரசகரும மொழி உரிய முறையில் அமுல்படுத்துவதற்குத் தேவையான நிதி வழங்கல் ஒதுக்கிடல் மற்றும் கொள்கை ரீதியான படிநிலைக் குறித்து இவ்வாய்வின் தகவல்களைப் பயன்படுத்த முடியும்.
- அரசகரும மொழிக் கொள்கை உரிய முறையில் அமுல்படுத்துவதற்கு தேவையான பின்னணியை உருவாக்குவதன் மூலம், மேலும் செயல்திறன் மிக்க, பெறுமதியான பொதுச் சேவையை ஏற்படுத்த அது வழிவகுக்கும்.

## செயன்முறை

இம் மொழி ஆய்வுக்காக பயன்படுத்தப்பட்ட ஆய்வு செயன்முறையை தயாரிக்கும் போது தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சின் “அரச நிறுவனங்கள் மூலம் மொழித்திட்டத்தை தயாரிக்கும் வழிகாட்டல் கைந்நூலில்” குறிப்பிடப்பட்டுள்ள பிரதான நான்கு துறைகளான 1) அரசகரும மொழிக் கொள்கையின் அமுலாக்கத்தை பிரதிபலித்தல், 2) நிருவாகமும் ஆவணப்படுத்தலும், 3) சேவை வழங்குதல், 4) நிறுவன ரீதியான அர்ப்பணிப்பு மற்றும் உதவிப் பொறிமுறை, போன்றவற்றின் மீது அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட துறைகளில் அரசகரும மொழிக் கொள்கை அமுலாக்கம் தொடர்பான நிலைப்பாட்டை கண்காணிப்பதற்கு தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சின் மூலம்

வெளியிடப்பட்ட, "அரச நிருவாகங்கள் மூலம் மொழித்திட்டம் தயாரிக்கும் வழிகாட்டல் கைந்நூலை" அடிப்படையாகக் கொண்டு வினாக்கொத்தும் பயன்படுத்தப்பட்டது. குறிப்பிட்ட வினாக்கொத்தின் மூலம் தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு தேவையான நேர்முகக் கலந்துரையாடல் மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள விசேட பயிற்சி அளிக்கப்பட்ட 17 கள கண்காணிப்பாளர்கள் ஈடுபட்டிருந்தனர்.

இவ் ஆய்வின் பிரதான நோக்கம் மற்றும் தகவல் திரட்டல் செயன்முறை தொடர்பான அறிவூட்டலுக்கு குறிப்பிட்ட ஒவ்வொரு அமைச்சுக்களினதும் செயலாளர் அல்லது பெயர் குறிப்பிட்ட அலுவலர் ஒருவர் பங்குபற்றி இருந்தார். இவ் ஒருநாள் செயலமர்வு லக்ஸ்மன் கதிர்காமர் நிலையத்தில் இடம்பெற்றது.

இம் மொழி ஆய்வுச் செயன்முறையின் ஒருபகுதியாக குறிப்பிட்ட தகவல்கள் ஒன்றுதிரட்டும் செயற்பாட்டுக்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து கள கண்காணிப்பாளர்களுக்கும் இரண்டு நாள் வதிவிட பயிற்சி வழங்கப்பட்டது. இப்பயிற்சியின் போது, கள கண்காணிப்பாளர்கள் மூலம் குறிப்பிட்ட நேர்முக கலந்துரையாடல்கள் மேற்கொள்ளும் விதம், கலந்துரையாடலை வழிநடத்தும் முறை கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளும் விதம் போன்ற விடயங்கள் பற்றி முறையான பயிற்சியும், தெளிவூட்டலும் வழங்கப்பட்டது. மேலும் வினாக்கொத்தை பயன்படுத்தும் முறை பற்றி மாதிரி நேர்முக கலந்துரையாடல்களும் இடம்பெற்றன. இவ்வாறான கலந்துரையாடலை நடத்தவதன் மூலம் கள கண்காணிப்பாளர்கள் நேர்முகக் கலந்துரையாடல் பயிற்சியை நடைமுறையில் பெற்றுக்கொள்ளக் கூடியதாக அமைந்தது. கண்காணிப்பாளர்களை பயிற்றுவிக்கும் செயற்பாட்டிற்கு இவ்வாறான ஆய்வுகள் தொடர்பில், தேர்ச்சி பெற்ற மற்றும் அனுபவமுள்ள பயிற்றுவிப்பாளர்கள் வளவாளர்களாக செயற்பட்டுள்ளனர்.

இவ்ஆய்விற்கு ஒத்துழைப்பு வழங்கிய அமைச்சின் அலுவலகர்களில் பிரதம அரசகரும மொழிக் கொள்கை அலுவலகர் (COLIO), அரசகரும மொழிக் கொள்கை அலுவலகர் (OLIO), அமைச்சின் துறைப்பிரதானி மற்றும் குறிப்பிட்ட அலுவலகர்களால் பெயரிடப்பட்ட அலுவலகர்கள் போன்றவர்களது கருத்துக்கள் மற்றும் தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன.

இம்மொழி ஆய்வின் போது சீரற்ற முறையை தெரிவுசெய்து, இச்செயன்முறையை நடைமுறைப்படுத்தாது, குறிப்பிட்ட வினாக்கொத்து தொடர்பில் தகவல்கள் ஒன்றுதிரட்டல் நடைமுறையில் செயற்படும் அனைத்து அமைச்சுக்களினதும் ஒத்துழைப்பு பெறப்பட்டது. அதன் அடிப்படையில் முழு ஆய்வுக்காக 50 அமைச்சுக்களின் தகவல்கள் ஒன்றுதிரட்டப்பட்டன.

இவ் ஆய்விற்கு பயன்படுத்தப்பட்ட வினாக்கொத்து ஆரம்பத்தில் சிங்கள மொழியில் தயாரிக்கப்பட்டு பின் தமிழ் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது. மேலும், களக் கண்காணிப்பாளர்கள் தகவல் ஒன்று திரட்டல் செயற்பாட்டில் ஈடுபடுவதற்கு முதல் குறிப்பிட்ட வினாக்கொத்தை பயன்படுத்தி, ஆய்வு மட்டத்தில் மாதிரி நேர்முகக் கலந்துரையாடல் இடம்பெற்றது. களச் செயற்பாட்டின்போது வினாக்கொத்தை பயன்மிக்கதாக பயன்படுத்த இச் செயன்முறை வழிவகுத்தது.

மொழி ஆய்வு தொடர்பான கள செயற்பாடானது 2017 மார்ச் மாதம் 27ஆம் திகதி தொடக்கம் 2017 ஜூலை 24 திகதிவரை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வின் மொத்த செயற்பாட்டுக்குப் பயன்படுத்தப்பட்ட கள கண்காணிப்பாளர்களின் எண்ணிக்கை 17 ஆகும். அவர்களுள் ஆறு ஆண்கள் உள்ளடக்கப்பட்டனர் ஏனையவர்கள் பெண்களாவர்.

இதன்போது அமைச்சு மட்டத்தில் அடிப்படைத் தகவல்கள் அறிக்கையிடப்பட்டதுடன், குறித்த தகவல்களின் உண்மைத் தன்மை மற்றும் உறுதிப்படுத்தல் தொடர்பில் குறிப்பிட்ட அமைச்சுக்களின் அரசகரும மொழிக் கொள்கை அமுலாக்கம் தொடர்பான, கொள்கை ரீதியான மற்றும் ஏனைய ஆலோசனைகளையும், பரிந்துரைகளையும் அடையாளம் காண்பதற்கு குறிப்பிட்ட அமைச்சுக்களின் அதிகாரிகளுக்காக இரண்டாம் கட்ட கலந்துரையாடலொன்றும் நடத்தப்பட்டது. இதன்போது, கள கண்காணிப்பாளர்களால் கண்காணிக்கப்பட்ட குறிப்பிட்ட தகவல்களை உறுதி செய்வதன் நோக்கில் தேவையான சந்தர்ப்பங்களின் புகைப்பட சாட்சிகளும் உள்ளடக்கப்பட்டு இவ் அறிக்கையில் முன்வைக்கப்படுகிறது.

இச்செயற்பாட்டில் இறுதி செயன்முறையாக அமைச்சுக்களின் அதிகாரிகளுடன் இடம்பெற்ற இரண்டாம் கட்ட கலந்துரையாடலின்போது மேலெழுந்த விடயங்களின் அடிப்படையில், இவ்வாறாக உங்கள் கைவசப்படுத்தப்பட்டுள்ள அறிக்கை, இவ் அமைச்சுக்களில் அரசகரும மொழிக்கொள்கை அமுலாக்க நிலை தொடர்பில் பெற்றுக்கொள்ள கூடியதாக அமைந்த தகவலை அடிப்படையாகக் கொண்டு சுருக்கமாக தயார் செய்யப்பட்ட மதிப்பீடாக முன்வைக்கப்படுகின்றது.

## ஆய்வின் எல்லைகள்

இவ்வாய்வை மேற்கொள்ளும்போதும், தகவல் பெற்றுக்கொள்ளும் செயற்பாடுகளின் போதும் முகம்கொடுக்க நேர்ந்த பல்வேறு எல்லைகள் பற்றி சிறு குறிப்பொன்று கீழ்க்காணுமாறு முன்வைக்கப்படுகிறது. ஆகவே இவ்வறிக்கையில் முன்வைக்கப்படும் தகவல், பகுப்பாய்வுகளை புரிந்துகொள்ளும் போது கீழ் குறிப்பிடப்பட்டுள்ள எல்லைகளைக் கவனத்தில்கொள்ளவும்.

- இவ் ஆய்வின் போது குறிப்பிட்ட ஒவ்வொரு அமைச்சுக்களினதும் பிரதான வளாகம் மாத்திரம் கண்காணிக்கப்பட்டதுடன், முழு அமைச்சினது கடமைகள் மற்றும் பணிகளுக்குரிய துணை நிறுவனங்களின் அரசகரும மொழிக் கொள்கை அமுலாக்கம் தொடர்பில் கருத்திற்கொள்ளப்படவில்லை.
- இவ் ஆய்விற்கான தகவல்களை பெற்றுக்கொள்வதற்காக நடத்தப்படவிருந்த நேர்முகக் கலந்துரையாடல்ளுக்கான குறிப்பிட்ட அலுவலர்களது நேரத்தை ஒதுக்கிக் கொள்வதில் சிரமங்கள் ஏற்பட்டன. அதன் காரணமாக பெயர் குறித்த அலுவலரால் வழங்கப்பட்ட தகவல்களது உண்மைத் தன்மையை உறுதிப்படுத்திக்கொள்வதில் சிரமங்கள் ஏற்பட்டன.
- ஆய்விற்குரிய தகவல்களை கண்காணிக்கும் போது முறையான வழிமுறையொன்றின் கீழ் பல்வேறு ஆவணங்களை பரிசீலிப்பதற்கான தேவை நிலவினாலும், ஒருசில அமைச்சுக்களது உள்ளக நடவடிக்கைகள், அவ்வாறான ஆவணங்கள் தொடர்பான உணர்வுபூர்வ கருத்துக்கள், தேசிய பாதுகாப்பு போன்ற காரணங்களால் தகவல்கள் உள்ளடங்கிய ஆவணங்களை கண்காணிப்பதில் தடைகள் காணப்பட்டன.
- ஒருசில அமைச்சுக்களுக்கும், அனேகமான அலுவலர்களுக்கும் மொழித்திட்டம் தொடர்பான விளக்கம் குறைந்த அளவில் காணப்பட்டது. சேவையில் இணைந்து குறுகிய காலம் என்பதே இதற்கான காரணமென குறிப்பிடப்பட்டது.
- ஒருசில அமைச்சுக்கள் அண்மையில் ஸ்தாபிக்கப்பட்டமை மற்றும் சில அமைச்சுக்களின் இடமாற்றம் செய்யப்படுவதால் தகவல் பெற்றுக்கொள்வதில் பல்வேறு சிரமங்கள் ஏற்பட்டன.

## அரசகரும மொழிக் கொள்கை அமுலாக்கத்திற்குரிய நேர்மறை முன்னெடுப்புக்கள்

- அனைத்து அமைச்சுக்களினதும் பிரதான பெயர்ப்பலகை அரசகரும மொழிக்கொள்கைக்கு அமைய காணப்படுகின்றமை
- 49 அமைச்சுக்களில் காணப்படும் பிரிவுப்பெயர்ப்பலகைகளில் 384 பெயர்ப்பலகைகள் கண்காணிக்கப்பட்டதுடன், அவற்றில் 70% மான பெயர்ப்பலகைகள் அரசகரும மொழிக்கொள்கைக்கு அமைய காணப்படுகின்றமை
- 42 அமைச்சுக்களில் காணப்பட்ட தனிநபர் மற்றும் பதவிப் பெயர்ப்பலகைகளில் 788 பெயர்ப்பலகைகள் கண்காணிக்கப்பட்டதுடன், அவற்றில் 43% மான பெயர்ப்பலகைகள் அரசகரும மொழிக்கொள்கைக்கு அமைய காணப்படுகின்றமை
- 40 அமைச்சுக்களில் காணப்பட்ட ஏனைய பெயர்ப்பலகைகளில் 223 பெயர்ப்பலகைகள் கண்காணிக்கப்பட்டதுடன், அவற்றின் 46%மான பெயர்ப்பலகைகள் அரசகரும மொழிக்கொள்கைக்கு அமைய காணப்படுகின்றமை
- 49 அமைச்சுக்களில் காணப்படும் வரவேற்பு கருமபீட சேவைகள் கண்காணிக்கப்பட்டதுடன் 36 அமைச்சுக்களில் (74%) முறையான வரவேற்பு கருமபீடம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.
- வரவேற்பு கருமபீடம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள 37 அமைச்சுக்களின் 11 அமைச்சுக்களில் மாத்திரம் (30%) வரவேற்பு கருமபீட சேவை அரசகரும மொழிக்கொள்கைக்கு அமைய இடம்பெறுகின்றது.
- 49 அமைச்சுக்களின் 18 அமைச்சுக்களில் பொது அறிவித்தல் கட்டமைப்பொன்று ஸ்தாபிக்கப்பட்டு தொழிற்படுவதுடன், அவற்றில் 04 அமைச்சுக்களில் மாத்திரமே அரசகரும மொழிக்கொள்கைக்கு அமைய இச்சேவை வழங்கப்படுகின்றது.
- 49 அமைச்சுக்களின் நிர்வாகம் மற்றும் ஆவணப்படுத்தலுக்குரிய அலுவல்களை அரசகரும மொழிக்கொள்கைக்கு அமைய மேற்கொள்வதற்கு போதுமானளவு பௌதிக வளம் 38 அமைச்சுக்களுக்கு (81%) காணப்படுகின்றது.
- 49 அமைச்சுக்களுக்கும் ஒட்டுமொத்தமாக 94 மொழிபெயர்ப்பாளர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 61 மொழிபெயர்ப்பாளர்கள் மாத்திரமே தற்சமயம் அமைச்சுக்களில் கடமையாற்றுகின்றனர். மேலும் 62 மொழிபெயர்ப்பாளர்களது தேவை நிலவுவதுடன், 48 மொழிபெயர்ப்பாளர்களது பதவி வெற்றிடங்கள் நிலவுகின்றன.
- 49 அமைச்சுக்களுக்கும் மாதாந்தம் மொத்தமாக சுமார் 241,600 கடிதங்கள் கிடைக்கப்பெறுவதுடன், அவற்றின் 70% சிங்கள மொழியிலும் 5% தமிழ் மொழியிலும், 25% ஆங்கில மொழியிலும் கிடைக்கப்பெறுகின்றன.
- தகவல்கள் பெற்றுக்கொள்ளக்கூடியதாக அமைந்த 42 அமைச்சுக்களின் 83% மான கடிதங்களுக்கு அவ்வவ் மொழிகளில் பதில் வழங்கும் ஆற்றல் காணப்படுகின்றது.
- 49 அமைச்சுக்களின் 43 அமைச்சுக்களது உத்தியோகபூர்வ வலைத்தளம் இயங்குகின்றது.
- உத்தியோகபூர்வ வலைத்தளம் காணப்படும் 43 அமைச்சுக்களின் 09 களின் (21%) வலைத்தளம் அரசகரும மொழிக்கொள்கைக்கு அமைய காணப்படுகின்றன.

# அரசகரும மொழிக் கொள்கை அமுலாக்கம் தொடர்பான அடிப்படை பிரச்சினைகள்

அரசகரும மொழிக்கொள்கை அமுலாக்கம் தொடர்பில் இவ்வாய்வின் எல்லைக்குள் அடையாளம் கண்ட பிரதான பிரச்சினைகள் இப்பகுதியில் கவனத்திற்கொள்ளப்படுகின்றது. இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்ட நான்கு அடிப்படை துறைகளாவன 1) அரசகரும மொழிக் கொள்கை அமுலாக்கமும் பிரதிபலித்தலும் 2) நிருவாகம் மற்றும் ஆவணப்படுத்தல், 3) சேவை வழங்குதல், 4) நிறுவன அர்ப்பணிப்பு மற்றும் உதவிப் பொறிமுறை போன்றன தொடர்பில் கவனத்தில் கொள்ளும் போது அனைத்து அமைச்சுக்களிலும் மேற்குறிப்பிட்ட அடிப்படை துறைகள் தொடர்பில் நிலவும் பொதுவான பிரச்சினைகள் பின்வருமாறு:


### அ. அரசகரும மொழிக்கொள்கை அமுலாக்கமும் பிரதிபலித்தலும்

#### அறிமுகம்

அனைத்து அமைச்சிக்களிலும் காணப்படும் பல்வேறு பெயர்ப்பலகைகள், வரவேற்புக் கருமபீட சேவை, தொலைபேசி அழைப்பு முகாமைத்துவம், சேவை பெறுநர்கள் தமது தாய்மொழியில் தொடர்பாடலை மேற்கொள்ளக்கூடிய நிறுவன ஆற்றல் மற்றும் பொது அறிவித்தல் கட்டமைப்பைப் பேணுதல் போன்றவற்றில் இருமொழிப் பயன்பாடு இடம்பெறும் முறை தொடர்பில் இத் துணைத் தலைப்பின் கீழ் பகுப்பாய்வு செய்யப்படுகின்றது.

அனைத்து அமைச்சுக்களினதும் பெயர்ப்பலகைகள் நான்கு அடிப்படைத் துறைகளின் கீழ் கண்காணிக்கப்பட்டன. அவை (பிரதான பெயர்ப்பலகை, துறைப்பெயர்ப்பலகைகள், தனிநபர் பதவிப் பெயர்ப்பலகை மற்றும் நிறுவனத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஏனைய பெயர்ப்பலகைகள் என்பனவாகும்.

- ஒருசில பிரிவுப் பெயர்ப்பலகைகள், பதவிப் பெயர்ப்பலகைகள் மற்றும் ஏனைய பெயர்ப்பலகைகளின் மொழிப்பயன்பாடு அரசகரும மொழிக்கொள்கைக்கு அமைய இடம்பெறாததுடன், அது எண்ணிக்கையில் மிக குறைந்தளவானதாகும்.




வரைபடம் 1 : பிரிவுப் பெயர்ப்பலகைகள் அ.க.மொ.கொ அமைவானது / முரணானது


- 49 அமைச்சுக்களில் காணப்படும் 384 பிரிவுப் பெயர்ப்பலகைகள் கண்காணிக்கப்பட்டதுடன், அவற்றில் 30% மான பிரிவுப் பெயர்ப்பலகைகள் அரசகரும மொழிக்கொள்கைக்கு முரணாக காணப்படுகின்றன.

அ.க.மொ.கொ க்கு முரணான 30% பிரிவுப் பெயர்ப்பலகைகளின் மொழிப்பயன்பாடு பின்வருமாறு:

| மொழி மூலம் | சதவீதம் |
|---|---|
| சிங்கள மொழியில் மாத்திரம் | 7% |
| தமிழ் மொழியில் மாத்திரம் | 0% |
| ஆங்கில மொழியில் மாத்திரம் | 16.5% |
| சிங்கள மற்றும் ஆங்கில மொழியில் மாத்திரம் | 6.5% |
| தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் மாத்திரம் | 0% |

அட்டவணை 1: அ.க.மொ.கொ க்கு முரணான பிரிவுப் பெயர்ப்பலகைகளின் மொழிப்பயன்பாடு

- 42 அமைச்சுக்களில் காணப்படும் 788 தனிநபர் / மற்றும் பதவிப் பெயர்ப்பலகைகள் கண்காணிக்கப்பட்டதுடன், அவற்றில் 57% தனிநபர் மற்றும் பதவிப் பெயர்ப்பலகைகள் அரசகரும மொழிக்கொள்கைக்கு முரணானது.





வரைபடம் 2 : தனிநபர் மற்றும் பதவிப் பெயர்ப்பலகைகள் அரசகரும மொழிக்கொள்கைக்கு அமைவானது / முரணானது

(அ.க.மொ.கொ க்கு முரணான 57% தனிநபர் மற்றும் பதவிப் பெயர்ப்பலகைகளின் மொழிப்பயன்பாடு பின்வருமாறு)

| மொழி மூலம் | சதவீதம் |
|---|---|
| சிங்கள மொழியில் மாத்திரம் | 6% |
| தமிழ் மொழியில் மாத்திரம் | 0.5% |
| ஆங்கில மொழியில் மாத்திரம் | 42.4% |
| சிங்கள மற்றும் ஆங்கில மொழியில் மாத்திரம் | 6.3% |
| தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் மாத்திரம் | 1.8% |

அட்டவணை 2: அ.க.மொ.கொ க்கு முரணான தனிநபர் மற்றும் பதவிப் பெயர்ப்பலகைகளின் மொழிப்பயன்பாடு

- 40 அமைச்சுக்களில் காணப்படும் ஏனைய பெயர்ப்பலகைகள் (நோக்கம், பணிக்கூற்று, கட்டிட வரைபடம் போன்ற ஏனைய பெயர்ப்பலகைகள்) 223 கண்காணிக்கப்பட்டதுடன், 54% மான ஏனைய பெயர்ப்பலகைகள் அரசகரும மொழிக்கொள்கைக்கு முரணாக காணப்பட்டன.




வரைபடம் 3 : ஏனைய பெயர்ப்பலகைகள் அரசகரும மொழிக்கொள்கைக்கு அமைவானது / முரணானது


அ.க.மொ.கொ க்கு முரணான 54% ஏனைய பெயர்ப்பலகைகளின் மொழிப்பயன்பாடு பின்வருமாறு:

| மொழி மூலம் | சதவீதம் |
|---|---|
| சிங்கள மொழியில் மாத்திரம் | 6% |
| தமிழ் மொழியில் மாத்திரம் | 0.5% |
| ஆங்கில மொழியில் மாத்திரம் | 40.5% |
| சிங்கள மற்றும் ஆங்கில மொழியில் மாத்திரம் | 6% |
| தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் மாத்திரம் | 1% |

அட்டவணை 2: அ.க.மொ.கொ க்கு முரணான ஏனைய பெயர்ப்பலகைகளின் மொழிப்பயன்பாடு

- வரவேற்பு கருமபீட சேவைக்கு இணைக்கப்பட்டுள்ள அலுவலகர்களுக்கு அரசகரும மொழிக் கொள்கைக்கு அமைய சேவை வழங்க முடிவதில்லை. அச் செயற்பாட்டுக்கு தேவையான தமிழ் மொழி அவர்களுக்கு இல்லை.


➢ 49 அமைச்சுக்களில் காணப்படும் வரவேற்பு கருமபீட சேவைகள் கண்காணிக்கப்பட்டதுடன், அவற்றின் 13 அமைச்சுக்களில் (26%) வரவேற்பு கருமபீடம் ஸ்தாபிக்கப்படவில்லை.




வரைபடம் 4: வரவேற்பு கருமபீடம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது / ஸ்தாபிக்கப்படவிலலை

- 08 அமைச்சுக்களில் வரவேற்பு கருமபீடம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.
- 05 அமைச்சுக்களில் வரவேற்பு கருமபீட அலுவல்கள் பாதுகாப்பு பிரிவினரின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

➢ வரவேற்பு கருமபீ டம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள 36 அமைச்சுக்களின் 26 அமைச்சுக்களில் (70%) வரவேற்பு கருமபீட சேவை அரசகரும மொழிக் கொள்கைக்கு முரணாக இடம்பெறுகின்றன.




வரைபடம் 5: வரவேற்பு கருமபீடம் சேவை அ.க.மொ.கொ க்கு அமைவானது / முரணானது

இவ் ஆய்வின் போது வரவேற்பு கருமபீட சேவைக்கு இணைக்கபட்டுள்ள அலுவலர்களுக்கு அரசகரும மொழிகளை கையாளக்கூடிய ஆற்றல் தொடர்பில் தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு 57 அலுவலகர்களுடன் நேர்முக கலந்துரையாடல் நடத்தப்பட்டதுடன், அதன் பெறுபேறு பின்வருமாறு :

| பதவி | அலுவலகர்களது எண்ணிக்கை | சிங்கள, தமிழ் மொழி ஆற்றலுடைய அலுவலகர்களது எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|---|
| வரவேற்பு அலுவலகர் | 37 | 8 | 21.6% |
| உதவி அபிவிருத்தி அலுவலகர் | 3 | 0 | 0% |
| அலுவலக உதவியாளர் | 17 | 6 | 35% |
| மொத்தம் | 57 | 14 | 26% |

அட்டவணை 4: வரவேற்பு கருமபீட அலுவலகர்களின் மொழி ஆற்றல்

மேலும் தமிழ் மொழியில் சேவை வழங்க முடியாத சந்தர்ப்பங்களில் மாற்றீடாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் பின்வருமாறு:

| மேற்கொள்ளப்படும் நடவடிக்கை | சதவீதம் |
|---|---|
| தமிழ் மொழி அறிந்த அலுவலகர் ஒருவரை நியமித்தல்/தமிழ் மொழி ஆற்றலுடைய அலுவலகர் ஒருவரிடம் உதவியைப் பெறல் | 51% |
| ஆங்கில மொழியில் உரையாடல் | 12.2% |
| சிங்கள மற்றும் ஆங்கில மொழியில் உரையாடுதல் | 2% |
| நேரடியாக குறிப்பிட்ட பிரிவிற்கு அனுப்பி சேவை வழங்குதல் | 2% |
| பதில் வழங்காத சந்தர்ப்பங்கள் | 32.7 |

அட்டவணை 5: அ.க.மொ.கொ அமைய சேவை வழங்க முடியாத சந்தர்ப்பங்கள் / பயன்படுத்தப்படும் மாற்று வழிகள்

- 49 அமைச்சுக்களின் 31 அமைச்சில் பொது அறிவித்தல் கட்டமைப்பு ஸ்தாபிக்கப்படவில்லை

- பொது அறிவித்தல் கட்டமைப்பு ஸ்தாபிக்கப்பட்டுள்ள 18 அமைச்சுக்களின், 14 அமைச்சின் குறிப்பிட்ட செயற்பாடு அரசகரும மொழிக்கொள்கைக்கு முரணாக இடம்பெறுகின்றன.

அதற்கமைய அரசகரும மொழி பயன்பாட்டிற்குரிய கண்காணிக்கப்பட்ட பெறுபேறுகள் பின்வருமாறு:

| பயன்படுத்தப்படும் மொழி | சதவீதம் |
|---|---|
| சிங்கள மொழி மாத்திரம் பயன்படுத்துதல் | 55.6% |
| சிங்கள மற்றும் ஆங்கில மொழிகளை பயன்படுத்துதல் | 22.2% |
| சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளை பயன்படுத்துதல் | 22.2% |

அட்டவணை 6: பொது அறிவித்தல் கட்டமைப்பின் அரசகரும மொழிப்பயன்பாடு

- 49 அமைச்சுக்களின், 05 அமைச்சுக்களில் மட்டுமே அவசர தொலைபேசி இலக்கம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது, அவற்றின் 02 அமைச்சுக்களில் மாத்திரமே அவசர தொலைபேசி இலக்க சேவை அரசகரும மொழிக்கொள்கைக்கு அமைய சேவை வழங்கப்படுகின்றது. எஞ்சிய 03 அமைச்சுக்களுக்கு சிங்கள மற்றும் ஆங்கில மொழிகளில் மாத்திரமே சேவை வழங்கக்கூடிய ஆற்றல் காணப்படுகின்றது.


## ஆ. நிர்வாகமும் ஆவணப்படுத்தலும்

### அறிமுகம்

அனைத்து அமைச்சினதும் நிர்வாகமும் ஆவணப்படுத்தலும் எனும் பிரிவின் செயற்பாடுகள் எந்தளவிற்கு அரசகரும மொழிக்கொள்கைக்கு அமைய இடம்பெறுகின்றதென்பது, இவ் அத்தியாயத்தின் மூலம் விசாரணைக்குட்படுத்தப்படுகிறது. மேலும், இது தொடர்பில் அனைத்து அமைச்சினுள் காணப்படும் ஆவணங்கள் தயாரித்தலோடு தொடர்புடைய பௌதீக மற்றும் மனித வளத்தின் அளவு போதுமானதெனவும், கடந்த ஆறு மாத காலத்திற்குள் தயாரிக்கப்பட்ட ஆவணங்களில் இரு மொழிக் கொள்கை மற்றும் மொழிபெயர்ப்பாளர்களின் எண்ணிக்கை போதுமான அளவு காணப்படுகின்றனவா எனும் விடயங்களின் அடிப்படையில் கண்காணிக்கப்பட்டன.


- அனைத்து அமைச்சுகளுக்கும் தேவையான இருமொழித் தேர்ச்சியுடைய மனிதவளம் போதுமானளவு காணப்படாமையினால் ஆவணம், அறிக்கை தயாரித்தல் உட்பட அமைச்சின் ஏனைய அலுவல்களை மேற்கொள்ளும் போது சில பிரச்சினைகள் மேலெழுகின்றன

➢ 49 அமைச்சுக்களில் நிர்வாகம் மற்றும் ஆவணப்படுத்தலுக்கு தேவையான செயற்பாடுகள் அரசகரும மொழிக்கொள்கைக்கு அமைய மேற்கொள்வதற்கு 09 (19%) அமைச்சுக்களுக்கு போதுமான பௌதிக வளங்கள் காணப்படவில்லை.




வரைபடம் 6: நிர்வாகம் மற்றும் ஆவணப்படுத்தல் செயற்பாடுகளுக்குரிய பௌதிக வளம் போதுமானளவு காணப்படுதல் / காணப்படாமை

➢ 49 அமைச்சுக்களின் நிர்வாகம் மற்றும் ஆவணப்படுத்தலுக்கு தேவையான செயற்பாடுகளை அரசகரும மொழிக்கொள்கைக்கு அமைய மேற்கொள்வதற்கு போதுமான மனிதவளம் 38 (77%) காணப்படவில்லை.




வரைபடம் 7: நிர்வாகம் மற்றும் ஆவணப்படுத்தல் செயற்பாடுகளுக்குரிய மனித வளம் போதுமானளவு காணப்படுதல் /

➢ 49 அமைச்சுக்களில் மொழிபெயர்ப்பாளர்களின் வெற்றிடங்கள் நிலவும் எண்ணிக்கை 48 ஆகும்.

## இ. சேவை வழங்குதல்

### அறிமுகம்


ஆய்விற்கு உட்படுத்தப்பட்ட அனைத்து அமைச்சுக்களிலும் சேவை வழங்குதல் பற்றி இவ் அத்தியாயத்தின் மூலம் கவனத்திற்கொள்ளப்படுகிறது. இவ் அமைச்சுக்களுக்கு வருகை தரும் பொதுமக்களுக்கு அரசகரும மொழிகளில் தொடர்பாடலை மேற்கொள்வதற்கு அமைச்சின் பணிக்குழுவிற்கு எந்தளவு ஆற்றல் உள்ளது எனவும் நிறுவனச் செயற்பாடுகளின் போது இரு மொழிப் பயன்பாடு அரசகரும மொழிக்கொள்கையின் அடிப்படை எந்தளவிற்கு ஏற்புடையதாக இடம்பெறுகின்றதென்பது பற்றியும் கண்காணிக்கப்படுகிறது.

இதன்போது அனைத்து அமைச்சுக்ளுக்கும் கிடைக்கப்பெறும் கடிதங்களுக்கு இரு மொழியிலும் பதில் வழங்கும் ஆற்றல், குறிப்பிட்ட பிரிவுகளுக்கு சேவையில் இணைக்கப்பட்ட அலுவலர்களது இருமொழி ஆற்றல், பொதுமக்களுடன் தகவல் தொடர்பாடலை மேற்கொள்ளும்போது இரு மொழிப்பயன்பாடு மற்றும் அமைச்சின் வலைத்தளம் எந்த அளவிற்கு அரசகரும மொழிக் கொள்கைக்கு அமைவானதென பிரிவுகள் கண்காணிக்கப்பட்டது.

- பல அமைச்சுக்களினால் வலைத்தளம் பேணப்பட்டாலும், அதன் சிங்கள மற்றும் தமிழ் வலைத்தளப் பக்கங்களில் காணப்படும் ஒருசில ஆவணங்கள் மற்றும் அறிக்கைகள் ஆங்கில மொழியில் மாத்திரம் பராமரிக்கப்படுகின்றன.

➢ உத்தியோகபூர்வ வலைத்தளம் தொழிற்படும் 43 அமைச்சுக்களின், 34 அமைச்சுக்களில் (79%) வலைத்தளம் அரசகரும மொழிக்கொள்கைக்கு முற்றிலும் முரணாக காணப்படுகின்றன.

➢ 28 அமைச்சுக்களில் (65%) ஒருசில தகவல்கள் மாத்திரம் சிங்கள மற்றும் தமிழ் மொழிகளில் காணப்படுகின்றன.




வரைபடம் 8: உத்தியோகபூர்வ வலைத்தளம் அ.க.மொ.கொ அமைவானது/ முரணானது

➢ 06 அமைச்சுக்களில் காணப்படும் (14%) தகவல்கள் ஆங்கில மொழியில் மாத்திரம் காணப்படுகின்றன.

- அவ்வவ் அமைச்சுக்களுக்கு கிடைக்கப்பெறும் கடிதங்களுக்கு பதில் வழங்கும் போது, அலுவலகர்களது இருமொழித் தேர்ச்சி குறித்து கவனம் செலுத்த வேண்டிய துறைகளாக கண்காணிக்கப்பட்ட விடயங்களுக்கமைய, தமிழ் மொழியில் கிடைக்கப்பெறும் கடிதங்களுக்கு குறிப்பிட்ட மொழியில் பதில் வழங்கும் நிறுவன ஆற்றல் கண்காணிக்கப்பட்டது. அது குறித்து ஒட்டுமொத்தமாக நோக்கும் போது, 42 அமைச்சுக்கள் தமிழ் மொழியில் கிடைக்கப்பெறும் கடிதங்களுக்கு பதில் வழங்கும் போது கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகள் கையாளப்படுகின்றன.

| தமிழ் மொழியில் பதில் வழங்கும் வழிமுறை | அமைச்சுக்களின் எண்ணிக்கை | வீகிதாசாரம் (%) |
|---|---|---|
| அமைச்சில் தமிழ் மொழி அறிந்த அலுவலகர்களது ஒத்துழைப்பைப் பெறல் | 31 | 73.8 |
| அமைச்சிற்கு வெளியில் மொழிபெயர்ப்பாளர் ஒருவரது ஒத்துழைப்பைப் பெறல் | 5 | 11.9 |
| அவசர சந்தர்ப்பத்தில் சிங்களம் அல்லது ஆங்கில மொழியில் பதில் வழங்குதல் | 2 | 4.8 |
| அமைச்சின் மொழிபெயர்ப்பாளர்களின் உதவியைப் பெறல் | 4 | 9.5 |
| **மொத்தம்** | 42 | 100.0 |

அட்டவணை 07: தமிழ் மொழியில் கிடைக்கப்பெறும் கடிதங்களுக்கு பதில் வழங்கும் போது பின்பற்றப்படும் வழிமுறை


## ஈ. நிறுவன அர்ப்பணிப்பும் உதவிப் பொறிமுறையும்

### அறிமுகம்

அரசகரும மொழிக்கொள்கையை அமுலாக்குவதற்கு அனைத்து அமைச்சுக்களினும் உறுதியான **நிறுவன அர்ப்பணிப்பு மற்றும் பெயரிடப்பட்ட அலுவலகர் மூலம் இது குறித்து முறையான தலையீடொன்று** இடம்பெறுகின்றதா? என்பது தொடர்பில் ஆய்வு செய்யப்படுகிறது. மேலும் தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சின் மூலம் தயாரிக்கப்பட்ட **அரச நிறுவனங்கள் மூலம் மொழித் திட்டம் தயாரித்தல், வழிகாட்டல் கைநூல்** அடிப்படையில் மொழித்திட்டம் தயாரித்தல் மற்றும் அமுலாக்கப்படுகின்றதா என இவ் ஆய்வில் அவதானிக்கப்படுகின்றது.

அதன் போது அனைத்து அமைச்சுக்களின் மொழித்திட்டம் தாபிக்கப்பட்டுள்ளமை மற்றும் அதன் தற்போதைய நிலை, மொழித் தேர்ச்சியின் அடிப்படையில் பணிக்குழுவை வகைப்படுத்துதல், மொழித் தேர்ச்சியை விருத்தி செய்யும் செயலமர்வுகளை நடத்துதல், மொழித் தேர்ச்சியுடைய அலுவலர்களை பொருத்தமான சேவைத் தளங்களுக்கு இணைத்தல், மொழி ஊக்குவிப்புக் கொடுப்பனவை பெற்றுக்கொள்பவர்களது அறிக்கையை பராமரித்தல் மற்றும் மொழித்திட்டத்தை அமுல்படுத்துவதற்கான வளங்களைத் திரட்டுதல் போன்ற விடயங்கள் தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்பட்டது.

- 49 அமைச்சுக்களின், 47 அமைச்சுக்களில் 96% மொழித்திட்டம் தயாரிக்கப்படவில்லை.
- முறையாக அனுமதிக்கப்பட்ட மொழித்திட்டம் ஒரு அமைச்சில் மாத்திரமே காணப்பட்டது.
- மொழித்திட்டம் தயாரித்தல் மற்றும் அமுல்படுத்துவதற்கான வளம் / நிதி ஒதுக்கிடல் எந்தவொரு அமைச்சிலும் இடம்பெறுவதில்லை.




வரைபடம் 9: அமைச்சுக்களின் மொழித்திட்டம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன / ஸ்தாபிக்கப்படவில்லை

- மொழித்திட்டம் தொடர்பில் ஓரளவு செயற்படும் 08 (16%) அமைச்சுக்கள் அடையாளம் காணப்பட்டன.
- ஒட்டுமொத்தமாக நோக்கும் போது 44 (90%) அமைச்சுக்களது பணிக்குழு மொழித்தேர்ச்சிக்கமைய வகைப்படுத்தப்படாததுடன், 5 (10%) அமைச்சுக்களில் குறிப்பிட்ட செயற்பாடு இடம்பெற்றுள்ளது.

- அரசகரும மொழிக்கொள்கையை நிலைபெறச் செய்வதற்கான மொழித்தேர்ச்சி அபிவிருத்தி நிகழ்ச்சிகளை நடத்துவதற்கான தேவையை அடையாளம் காணும் செயற்பாடு 28 (57%) அமைச்சுக்களில் இடம்பெறாததுடன், 21 (43%) அமைச்சுக்களில் இடம்பெற்றுள்ளது.
- மொழித்தேர்ச்சி அபிவிருத்தி நிகழ்ச்சிகள் 34 (69%) அமைச்சுக்களில் இடம்பெறாததுடன், 15 (31%) அமைச்சுக்களில் இடம்பெற்றுள்ளது.

## யோசனைகள் மற்றும் பரிந்துரைகள்

ஒட்டுமொத்தமாக இவ் ஆய்வினூடாக அனைத்து அமைச்சிக்களிலும் அரசகரும மொழிக்கொள்கையை நடைமுறையில் மேம்படுத்தும் முறை தொடர்பில் இடம்பெற்ற விசாரணையின் போது, மேற்குறிப்பிட்ட நான்கு பிரதான துறைகளின் தற்போதைய நிலைகளைக் கண்காணிக்கும் போது கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் மேலெழுந்தன. குறித்த அமைச்சில் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக மேற்கொள்ளளப்பட்ட நேர்முகக் கலந்துரையாடல்களின் மூலம் மேலெழுந்த கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு இவ் அமைச்சினுள் அரசகரும மொழிகளை பயனுள்ள மற்றும் செயற்திறன்மிக்க அமுல்படுத்தலை கவனத்திற்கொள்ள வேண்டிய கருத்துக்கள் மற்றும் பரிந்துரைகள் சில கீழ்வருமாறு முன்வைக்கப்படுகிறது.

ஆகையால் அனைத்து அமைச்சுக்களினதும் அரசகரும மொழிக்கொள்கை அமுல்படுத்துவது தொடர்பில் இவ்வறிக்கையில் மேற்குறிப்பிட்ட அத்தியாயங்களில் சுட்டிக்காட்டப்பட்ட நேர்மறையான முன்னெடுப்புக்கள், அடிப்படைப் பிரச்சினைகள் உட்பட கீழே குறிப்பிடப்பட்டுள்ள யோசனைகள், மற்றும் பரிந்துரைகள் போன்ற அனைத்து தகவல்கள், முறையாகவும் நடைமுறையில் பயன்படுத்தக்கூடியதாக அமையும் எனவும் **மொழித் திட்டமொன்றைத் தயாரிப்பதற்கான அடிப்படை ஆவணமாக** பயன்படுத்தப்பட முடியும் என எதிர்பார்க்கின்றோம்.

மேலும் இதன் அடிப்படையில் முன்வைக்கப்படும் யோசனைகள் மற்றும் பரிந்துரைகள் இவ் அறிக்கையின் இணைப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிர்வாக சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள "அரசகரும மொழிக் கொள்கை மற்றும் அது குறித்த சட்ட ஏற்பாடுகளுக்கமைய" முன்வைக்கப்படுகின்றன.

#### அ. அரசகரும மொழிக்கொள்கை அமுலாக்கமும் பிரதிபலித்தலும்

- அரசகரும மொழிக்கொள்கைக்கு அமைய இடம்பெறாத அனைத்து பிரிவுப் பெயர்ப்பலகைகள் மற்றும் தனிநபர் / பதவி பெயர்ப்பலகைகள் சரியான முறையில் எழுத்துப் பிழைகள் மற்றும் மொழி ஒழுங்கு முறைக்கமைய (சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் என்ற வகையில்) தயாரிப்பதுடன், அமைச்சுக்களில் காணப்பட வேண்டிய பெயர்ப்பலகைகளின் எண்ணிக்கையை படிப்படியாக மேம்படுத்தல் வேண்டும்.
- அமைச்சில் / அரச நிறுவனத்தில் ஏனைய பெயர்ப்பலகைகள் காட்சிப்படுத்தும் போது, அவற்றை அ.க.மொ.கொ இற்கு அமைய காட்சிப்படுத்துவதுடன், அ.க.மொ.கொ அமைய இடம்பெறாத பெயர்ப்பலகைகளை சரியான முறையில் மீண்டும் தயாரிக்கப்பட வேண்டும். அது குறித்து நிர்வாக ஒழுங்கு விதிகள் அவசியம் ஏற்படுமாயின், புதிதாக தயாரிக்கப்பட வேண்டும்.

- வரவேற்பு கருமபீடம் அ.க.மொ.கொ யை அமுல்படுத்துவதற்கு முக்கிய பணிகளை மேற்கொள்வதனால் வரவேற்பு கருமபீடம் ஸ்தாபிக்கபடாத அமைச்சுக்கள் உட்பட, வரவேற்பு கருமபீட சேவை தனியார் பாதுகாப்பு பிரிவு அல்லது மாற்று வழிமுறைகளுக்கமைய முகாமை செய்யும் அமைச்சுக்கள் அந்நிலைகளை துரிதமாக திருத்தியமைத்தல் வேண்டும்.

- வரவேற்பு கருமபீடத்தில் இருமொழியிலும் சேவை வழங்கக்கூடிய மொழித்தேர்ச்சியுடைய அலுவலகர்களை சேவையில் இணைத்து அச்சேவையை நிறுவன கட்டமைப்பிற்கு உள்ளடக்க வேண்டும்.

- பொது அறிவித்தல் கட்டமைப்பு மற்றும் அவசர தொலைபேசி இலக்கங்கள் இயங்கும் அமைச்சுக்களில் அ.க.மொ.கொ க்கு அமைய சேவை வழங்கக்கூடிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

- வரவேற்பு கருமபீட சேவையின் போது வழங்கப்படும் விண்ணப்பம், மாதிரிப் படிவம் போன்ற ஆவணங்களை அ.க.மொ.கொ க்கு அமைய பராமரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## ஆ. நிர்வாகம் மற்றும் ஆவணப்படுத்தல்

- அமைச்சுக்கள் மட்டத்தில் மொழிபெயர்ப்பாளர்களது தேவையை சரியான முறையில் அடையாளம் காணுதல் வேண்டும். மேலும் இதுவரை வெற்றிடம் நிலவும் மொழிபெயர்ப்பாளர் பதவிகளை துரிதமாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

- அமைச்சுக்களின் அவ்வப் பிரிவுகளின் தேவைகளுக்கமைய அரசகரும மொழிக்கொள்கைளை சரியான முறையில் அமுல்படுத்துவதற்கான அனைத்து பௌதிக வளங்களும் போதுமானளவு காணப்படுகின்றமை தொடர்பில் கண்டறிவதற்கு கணக்காய்வு ஒன்றை மேற்கொள்வதுடன், தேவையான வளங்களை துரிதமாக நிவர்த்தி செய்துகொள்ளல் வேண்டும்.

- அமைச்சுக்களில் நிர்வாகம் மற்றும் ஆவணப்படுத்தும் செயற்பாடுகள் அரசகரும மொழிக்கொள்கைக்கு அமைய மேற்கொள்ளக்கூடிய மொழித்தேர்ச்சியுடைய மனிதவளங்களின் தேவையை பூர்த்தி செய்துகொள்வதற்கும், தயாரிக்கப்படும் அனைத்து ஆவணங்களையும் அ.க.மொ.கொ இற்கு அமைய தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும் அ.க.மொ.கொ க்கு முரணாக தயாரிக்கப்பட்டுள்ள ஆவணங்களை துரிதமாக அ.க.மொ.கொ க்கு அமைய தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

**இ. சேவை வழங்குதல்**

- அமைச்சுக்களுக்கு கிடைக்கப்பெறும் கடிதங்களுக்கும், அமைச்சினால் நிறுவனங்கள் மற்றும் பிரஜைகளுக்கு அனுப்பும் கடிதங்கள் அரசகரும மொழிக்கொள்கைக்கு அமைய இடம்பெறல் வேண்டும். அதுகுறித்து அரச அலுவலகர்களது சட்ட ரீதியான உடன்பாடுகள் மற்றும் கொள்கைகளுக்கு உடன்பட்டுள்ளமை தொடர்பில் அரச அலுவலகர்களது அறிவை மேலோங்கச் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் காலத்தின் தேவையாகும்.

- அமைச்சுக்களில் காணப்படும் வலைத்தளங்களில் சிங்கள மற்றும் தமிழ் வலைத்தள பக்கங்களின் உள்ளடக்கங்கள் அரசகரும மொழிக்கொள்கைக்கு அமைய சிங்கள மற்றும் தமிழ் மொழியில் குறிப்பிட்ட தகவல்கள் உள்ளடங்கும் வகையில் நிர்மாணிக்கப்பட வேண்டும். இதன்போது அமைச்சுக்கள் உட்பட, அரச நிறுவனங்களுக்கான வலைத்தள பக்கங்களை நிர்மாணிக்கும் போது உடன்பாடொன்றான அ.க.மொ.கொ க்கு அமைய செயற்படுவதற்கு தேவையான புதிய சட்ட / நிர்வாக ஒழுங்கு விதிகளை அடையாளம் காணுதல் வேண்டும்.

- தற்சமயம் இயங்கும் வலைத்தளங்களின் தகவல்கள் அரசகரும மொழிக்கொள்கைக்கு அமைய சரியான முறையில் இடம்பெறச் செய்வதற்கு அமைச்சுக்கள் மட்டத்தில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ள அலுவலகர்கள் துரிதமாக செயற்படுதல் வேண்டும்.

- அமைச்சுக்கள், பிரிவுகள் மட்டத்தில் அரசகரும மொழிக்கொள்கையை அமுல்படுத்துவதற்கு தேவையான இருமொழித்தேர்ச்சியுடைய பணிக்குழுவின் தேவை / எண்ணிக்கை போன்றவற்றை கருத்திற்கொண்டு கணக்காய்வு ஒன்றை அனைத்து அமைச்சுக்களிலும் நடத்துதல் காலத்தின் தேவையாகும்.

- அ.க.மொ.கொ க்கு அமைய சேவை வழங்குவதற்கு அனைத்து பிரிவுகளுக்கும் குறைந்தபட்சம் இருமொழித் தேர்ச்சியுடைய ஒரு அலுவலகரையேனும் சேவையில் இணைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். இந்நிலையை ஏற்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளுக்கான கொள்கை மற்றும் நிர்வாக ரீதியான குறுகிய மற்றும் நீண்ட கால மூலோபாயங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

- அமைச்சுக்கள் மட்டத்தில் அல்லது அது குறித்த நிறுவன மட்டத்தில் பொது மக்களை தெளிவூட்டுவதற்கான நிகழ்ச்சிகளை திட்டமிடும் போது அவற்றை அரசகரும மொழிக்கொள்கைக்கு அமைய நடத்துவதற்கான திட்டங்களை தயாரித்தல் வேண்டும். விசேடமாக தமிழ் மொழிபெயர்ப்புக்களை சமர்ப்பிக்கும் போது, தாமதங்கள் ஏற்படாமலிருப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**ஈ. நிறுவன அர்ப்பணிப்பு மற்றும் உதவிப் பொறிமுறை**

- அமைச்சுக்களில் மொழித்திட்டத்தை தயாரிப்பதற்கு தேவையான வழிகாட்டல்கள் மற்றும் ஆலோசனைகள் தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சினூடாக பெறல் வேண்டும்.
- அனைத்து அமைச்சுக்களிலும் "மொழிக்குழு மற்றும் மொழித்திட்டம்" தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். (அரச நிர்வாக சுற்றுநிறுபம் 18/2009 இற்கு அமைவானது)
- பிரதம அரசகரும மொழி அமுலாக்கும் அலுவலகர் மற்றும் அரசகரும மொழி அமுலாக்கும் அலுவலகர் அரச நிர்வாக சுற்றுநிருபம் 18/2009 இற்கு அமைய கடமையாற்ற வேண்டும்.
- அமைச்சுக்களது மொழிக்குழு மற்றும் மொழித்திட்டம் தயாரித்தல், அவற்றை அமுல்படுத்துவதற்கு தேவையான வளம் திரட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
- மொழித்தேர்ச்சியை பூர்த்தி செய்த அலுவலகர்களை பொருத்தமான இடங்களில் சேவையில் இணைப்பதற்கு அமைச்சின் நிர்வாகத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
- அமைச்சின் அலுவலகர்களது மொழி ஆற்றல், மொழித் தேர்ச்சிக்கமைவான தரவுகளை அறிக்கையிடுவதுடன் குறித்த அலுவலகர்களை சேவையில் இணைப்பதற்கான ஒழுங்கு முறையொன்றை நிர்மாணித்தல் வேண்டும்.
- அரசகரும மொழிக்கொள்கை அமுலாக்கத்தின் முக்கியத்துவம் தொடர்பில் அரச அலுவலகர்களது மனப்பாங்கில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு தேவையான நிகழ்ச்சிகளை தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சு மற்றும் அவ்வவ் அமைச்சுக்களுடன் இணைந்து செயற்படுதல் வேண்டும்.

**உ. ஆய்வின் போது அமைச்சின் அலுவலகர்களினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளும் பரிந்துரைகளும்**

- அரச சேவையில் இணைத்துக் கொள்ளும் போது, அரசகரும மொழிகள் ஆணைக்குழு மற்றும் அரச சேவைகள் ஆணைக்குழு / பொது நிர்வாக அமைச்சு போன்ற நிறுவனங்கள் மிக நெருக்கமாக செயற்படுதல் வேண்டும். தற்சமயம் கடமையில் ஈடுபட்டுள்ள அலுவலர்களுக்கான மொழித்தேர்ச்சி பரீட்சைக்கு மேலதிகமாக, புதிய நியமனங்கள் வழங்குதலின் போது மொழித்தேர்ச்சி (எழுத்துமூலம் / வாசித்தல் / உரையாடுதல்) போன்றவற்றை அடிப்படை காரணிகளாக கவனத்தில் கொள்ளல் வேண்டும்.
- அரசகரும மொழிகளை கற்பதற்கு அரச அலுவலகர்கள் காண்பிக்கும் விருப்பம் தொடர்பில் நடைமுறையில் காணப்படும் இடையூறுகள் குறித்து கவனம் செலுத்தி அவற்றிற்கான தீர்வுகளை வழங்குவதற்கு தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சு மற்றும் அரசகரும மொழிகள் திணைக்களம் குறிப்பிட்ட பிரதேச மற்றும் மாவட்ட மட்ட நிர்வாக கட்டமைப்புக்களுடன் இணைந்து செயற்படுதல் வேண்டும்.

- அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்களில் அரசகரும மொழிக்கொள்கைக்கமைய தேவைகளை பூர்த்தி செய்வதற்கான நிலைகளை மீண்டும் விசாரணைக்குட்படுத்துவற்கு தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சில் நிகழ்ச்சித் திட்டம் ஒன்றை ஆரம்பித்தல் வேண்டும்.

- அரசகரும மொழிக்கொள்கை அமுலாக்கத்தின் போது மேலெழும் கொள்கை ரீதியான மற்றும் நடைமுறை ரீதியான அமுலாக்கத்தில் ஏற்படும் பிரச்சினைகள் மற்றும் சவால்கள் எவ்வாறான என்பது தொடர்பான தகவல்கள் பிரதேச மற்றும் மாவட்ட அலுவலகர்களது, நிறுவனங்களின் ஊடாக பெற்றுக்கொள்ளக்கூடிய முறையான கட்டமைப்பொன்றை தயாரிப்பதற்கு தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சு மற்றும் அரசகரும மொழிகள் திணைக்களத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

- அ.க.மொ.கொ அமுல்படுத்துவதற்கு அரச அலுவலகர்கள் பெற்றுக்கொள்ள வேண்டிய மொழித்தேர்ச்சிக்குரிய வழிமுறைகள் நடைமுறை சாத்தியமற்றதென்பது அனேகமானவர்களின் கருத்தாகும். அதற்கமைய நடைமுறையில் காணப்படும் கொள்கை மற்றும் நிர்வாக ரீதியான கட்டமைப்புக்கள் மீள் பரிசீலனை செய்தல் வேண்டும்.

- அரசகரும மொழிக் கொள்கையை அமுலாக்குவதற்குரிய கடமை, பொறுப்பு மற்றும் வகைப்பொறுப்புக்களை சரியான முறையில் மேற்கொள்வதற்கான தெளிவூட்டல்களை குறிப்பிட்ட அலுவலகர்களுக்கு வழங்குவதுடன், அதனூடாக அவ் அலுவலகர்களுக்கான பொறுப்புக்கள் தொடர்பில் விளக்கம் அளித்தல் வேண்டும்.

- அமைச்சுக்கள் மற்றும் அமைச்சுக்களின் கீழ் இயங்கும் நிறுவனங்களின் மட்டத்தில் அரசகரும மொழிக்கொள்கை அமுலாக்கத்தின் போது மேலெழும் முரண்பாடான நிலைகளை முறையாக குறிப்பிட்ட கொள்கை உருவாக்குபவர்கள் மற்றும் நிர்வாக அதிகாரிகளுக்கு அனுப்புவதற்கான தெளிவூட்டல் அவ்வவ் நிறுவனங்களின் அதிகாரமுடைய அலுவலர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

- இலங்கையில் தேசிய மட்டத்தில் அரசகரும மொழிக்கொள்கையை அமுல்படுத்துவதற்கான முன்னேற்ற மதிப்பீடொன்றை நடத்துவதற்கும், அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் மேற்பார்வையின் கீழ் மொழி கணக்காய்வொன்றை நடத்துவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

- அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் கடமைகள் மற்றும் பணிகள் தொடர்பான விளக்கம் குறைந்தளவில் காணப்படுவதால் நாடு பூராகவும் பரந்தளவில் அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் உப அலுவலகங்களை ஸ்தாபித்து, மொழிகள் ஆணைக்குழுவுடன் நெருக்கமாக மிக விரைவாக பிரஜைகளுக்கு தொடர்பு கொள்ளக்கூடிய நிறுவனமொன்றாக ஏற்படுத்த அரசின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

- அரசகரும மொழிகள் ஆணைக்குழுவை சுயாதீனமாக்குவதுடன், அரசகரும மொழிக்கொள்கை அமுலாக்கத்திற்குரிய நடவடிக்கைகளை இலகுவாக மேற்கொள்ள முடியும்.

## இணைப்பு –01

**அரசகரும மொழிகள் தொடர்பான கொள்கை அமுலாக்கத்தினை பொறுப்பளித்தல் –** 2009.09.25 திகதிய 1620/27 இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலில் அரசகரும மொழிகள் தொடர்பான கொள்கையினது அமுலாக்கத்திற்கான பொறுப்புடைமையின் கையளிப்பு தொடர்பான விபரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 12/2003 (iii)** – 2016.08.22 ஆம் திகதி வெளியிடப்பட்ட இந்த சுற்றறிக்கை மூலம் மொழி பெயர்ப்பு மற்றும் தட்டச்சு செய்வதற்கான கொடுப்பனவு திருத்தம் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 01/2014 (iii)** – 2016.05.16 திகதி வெளியிடப்பட்ட இந்த சுற்றறிக்கை மூலம் மற்றைய அரசகரும மொழித் தேர்ச்சியை பெற்றுக் கொள்வது தொடர்பாக குறிப்பிடப்பட்ட எழுத்துப் பரீட்சை மற்றும் வாய்மொழிப் பரீட்சை 2016 ஆம் வருடத்திலிருந்து இரண்டு முறை நடாத்துவதற்கான ஒழுங்கு விதிகள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 01/2014 (ii) –** மற்றைய அரசகரும மொழித் தேர்ச்சி மட்டத்தை அடைந்து கொள்வதற்காக உள்ள கால எல்லைக்குள் குறிப்பிட்ட அதிகாரிகளுக்கு இடம் கிடைக்காததால் 2012.06.30 ஆம் திகதி வரை மாகாண அரச சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்ட அனைத்து அதிகாரிகளும் 2018.12.31 வரை கால நீடிப்புக் காலம் வழங்குவது தொடர்பாக 201.01.14 ஆம் திகதி வெளியிடப்பட்ட இச் சுற்றறிக்கை மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது.

**பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 01/2014 (i) –** பொது நிர்வாக சுற்றறிக்கை கட்டளை விதிமுறைகளுக்கு அமைய மற்றைய அரசகரும மொழித் தேர்ச்சி பெற்றுக் கொள்வதற்கு போதுமான வாய்ப்புகள் கிடைக்காத உத்தியோகத்தர்களுக்கு 2016.06.30 ஆம் திகதி வரை நீடிப்பு காலம் வழங்கப்பட்டது தொடர்பான 2014.09.29 ஆம் திகதி வெளியிடப்பட்ட சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல. 04/2014** – அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள், அரசாங்க வங்கிகள் மற்றும் முழுமையாக அரசுக்குச் சொந்தான கம்பனிகள் என்பவற்றின் உத்தியோகத்தர்களுக்கான அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்தலும் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளைச் செலுத்துதல் தொடர்பான ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டதாக 2014.09.25 ஆம் திகதியன்று இந்த முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

**அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 01/2014** – 2014 ஜனவரி 21ம் திகதியன்று அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 01/2014 இணைப்பு 1 இல் உள்வாங்கப்படாத உத்தியோகத்தர்களினால் எய்தப்பட வேண்டிய மற்றய அரசகரும மொழித்தேர்ச்சி மட்டத்தை தீர்மானிப்பதற்கு தாபனப் பணிப்பாளர் நாயகத்துக்கு அனுப்பிவைக்க வேண்டிய படிவம் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளது.

**அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 01/2014** அரசாங்க உத்தியோகத்தர்களினால் எய்தப்பட வேண்டிய அரசகரும மொழித் தேர்ச்சிக்குரியதான விடயங்களை ஆய்வு செய்து சிபாரிசுக்களை சமர்ப்பிப்பதற்காக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் குழுவின் 2013.05.29 ஆம் திகதிக்குரிய அறிக்கையினூடான சிபாரிசுகளிற்கு அமைய அரசகரும மொழிகள் கொள்கையை நடைமுறைப்படுத்துவது

தொடர்பாக வெளியிடப்பட்ட 2007.05.28 திகதியன்று அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 07/2007 மற்றும் அதற்கு ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களிற்காக இச் சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

**அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 04/2012** – 2012 ஆகஸ்ட் 30 ஆம் திகதி வெளியிடப்பட்ட இச்சுற்றறிக்கையினூடாக அரசாங்க நிறுவனங்களினாள் கடிதத் தொடர்பாடல்கள் மேற்கொள்ளப்படும் போது அலதானிக்க வேண்டிய மொழிப் பயன்பாடு ஏற்பாடுகள் தொடர்பான மீள் கவனத்திற்காக இச் சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

**அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 01/2011 (i)** – 2011 டிசம்பர் மாதம் 21 ஆம் திகதி வெளியிடப்பட்ட இச்சுற்றறிக்கையினூடாக அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 29/98 மற்றும் 03/2007 இன் கீழ் மொழித்தேர்ச்சி ஊக்குவிப்புக் கொடுப்பனவினைப் பெறும் உத்தியோகத்தர்களின் மொழியாற்றலை பணிக்கமைச் செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்தலை வலியுறுத்துகின்றது.

**அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 01/2011** – 2011 ஒக்டோபர் மாதம் 12 ஆம் திகதி வெளியிடப்பட்ட இச் சுற்றறிக்கையினூடாக அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 29/98 மற்றும் 03/2007 இன் கீழ் மொழித்தேர்ச்சி ஊக்குவிப்புக் கொடுப்பனவினைப் பெறும் உத்தியோகத்தர்களின் மொழியாற்றலை பணிக்கமைச் செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

**அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 12/2003 (ii)** – 2011 ஆகஸ்ட் மாதம் 05 ஆம் திகதி வெளியிடப்பட்ட இச்சுற்றறிக்கையினூடாக 12/2003 (ை) இல் குறிப்பிடப்பட்டுள்ள மொழிப்பெயர்ப்புக்கான கட்டணங்களை அளிக்கும் பொழுது உரிய கட்டணங்களாவன மொழிப்பெயர்ப்புக்காக பிரயோகிக்கப்பட்ட ஆவணத்திலோ அல்லது மொழிப்பெயர்க்கப்பட்ட ஆவணத்திலோ உள்ள சொற்களின் எண்ணிக்கை மீது அளிக்கப்பட முடியும் .

**அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 12/2003 (i)** – மொழிபெயர்ப்பு மற்றும் உரைபெயர்ப்புக்கான கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய விதம் 2010 ஒக்டோபர் 20 ஆம் திகதி வெளியிடப்பட்ட சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 03/2010** – அரச நிறுவனமொன்றினால் கடிதப் பரிமாற்றம் மேற்கொள்ளப்படும் பொழுது பின்பற்றப்பட வேண்டிய மொழி ஏற்பாடுகளை வலியுறுத்தி இந்த சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

**அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை கடித இல. 04** – அரசாங்க நிறுவனங்களில் மொழிப் பெயர்ப்பு பணிகளில் ஈடுபட்டுள்ள மொழிபெயர்ப்பு அலுவர்கள் தாம் சேவையாற்றும் இடத்தில் கடமைகளுக்கு தடைகள் ஏற்படாதவாறு திணைக்களத் தலைவரின் அனுமதிக்கு அமைய வேறு அரச நிறுவனங்களின் மொழிப் பெயர்ப்பு பணிகளை நிறைவேற்ற முடியுமெனவும் அதன் பொருட்டு அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 12/2003 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் படிகளை பெற்றுக் கொள்ள முடியுமெனவும் இச்சுற்றறிக்கை கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை கடித இல. 18/2009** – 2009 நவம்பர் 25ம் திகதி வெளியிடப்பட்ட இந்த சுற்றறிக்கை ஊடாக 1620/27 ஆம் இலக்க 25.09.2009 ஆம் திகதிய அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருந்த ஏற்பாடுகள் மீண்டும் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தன. அவ் ஏற்பாடுகளை தத்தமது நிறுவனங்கள் தொடர்பாக நடைமுறைப்படுத்துவதை உறுதிப்படுத்த அமைச்சு

செயலாளர்கள் திணைக்களத் தலைவர்கள் மற்றும் மாகாண அரச சேவை ஆணைக்குழுக்களின் செலாளர்கள் ஆகயோர் பணிப்பானை கொண்டுள்ளனர்.

**அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 15/2009 —** அரசியல் யாப்பின் ஐஏ ஆம் அத்தியாயத்தின் மொழி தொடர்பான ஏற்பாடுகள் பின்பற்றுமாறு அறிவுறுத்தி வெளியிடப்பட்ட 25/89, 25/89(I), 22/91 கொண்ட அரச நிருவாக சுற்றறிக்கைகள் மற்றும் அரச சிருவாக சுற்றறிக்கை கடிதம் 01/2008 ஆகியவற்றிற்கு அமைச்சுச் செயலாளர்கள், மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் கூட்டுத்தாபனத் தலைவர்கள் ஆகியோரின் கவனம் 2009 ஆகஸ்ட் 26ம் திகதி வெளியிடப்பட்ட இல. 15/2009 கொண்ட அரச நிறுவாக சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை தத்தமது நிறுவனங்களில் நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அவர்கள் மேற்கொள்ள வேண்டுமெனவும் அவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

**அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 07/2007** (I) **—** தாபனக்கோவையின் (II) ஆம் அத்தியாயத்தில் 12:11:2 என புதிய உப பிரிவொன்று இந்த சுற்றறிக்கை ஊடாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

சகல அரச சேவை நியதிகளிலும் மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறைகளிலும் இவ் ஏற்பாடுகளை சேர்ப்பதன் மூலம் அவை திருத்தப்படல் வேண்டுமென இச் சுற்றறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. 2007-07-01 ஆம் திகதி தொடக்கம் வழங்கப்படும் சகல நியமனக் கடிதங்களிலும் இவ் ஏற்பாடுகள் உள்ளடக்கப்படல் வேண்டுமெனவும் கோரப்பட்டுள்ளது.

**அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 07/2007 —** 2007 மே 28ம் திகதி வெளியிடப்பட்ட இச் சுற்றறிக்கையில் அரச ஊழியர்களுக்கு தமது கடமைகளை சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் நிறைவேற்றுவதற்கான இயலுமையை பெற்றுக் கொடுத்தல் தொடர்பான ஏற்பாடுகளும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 03/2007–** 2009 பெப்ரவாரி மாதம் 09ம் திகதி வெளியிடப்பட்ட இச்சுற்றறிக்கையில் அரச கரும மொழிகளில் ஒன்றுக்கு மேல் தேர்ச்சி பெறும் அரச அலுவலர்கட்கு ஊக்குவிப்பு கொடுப்பனவு செய்தல் தொடர்பான ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. 2007-07-01 ஆம் திகதிக்குப் பின் வேலையில் இணைந்த அலுவலர்கட்கு இவ் ஏற்பாடுகள் ஏற்புடையதாகாது.

**அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 31/96 —** 1996 நவம்பர் 08ம் திகதி வெளியிடப்பட்ட இச் சுற்றறிக்கையில் அரசகரும மொழிகள் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் பொருட்டு அலுவலகத் தேவைகளை பூர்த்தி செய்வது தொடர்பான ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 36/92 -** 1992 டிசெம்பர் மாதம் 18ம் திகதி வெளியிடப்பட்ட இச்சுற்றறிக்கையில் அரசகரும மொழிகள் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் பொருட்டு அலுவலகத் தேவைகளை பூர்த்தி செய்வது தொடர்பான ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 22/91 —** 1991 யூன் 17ம் திகதி வெளியடப்பட்ட இச்சுற்றறிக்கை மூலம் சகல அரசாங்க நிறுவனங்ளின் படிவங்களும் ஒரே கடதாசியில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் அமைந்திருக்க வேண்டுமென வலியுருத்தும் அமைச்சரவைத் தீர்மானத்துக்கு சகலரது கவனமும் கோரப்பட்டுள்ளது. இவ்வாறு அமையாத சகல பழைய படிவங்களும் அகற்றப்படல் வேண்டுமெனவும் இதில் கூறப்பட்டுள்ளது.

**அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 51/90 —** 1990 டிசெம்பர் 07ம் திகதி வெளியிடப்பட்ட இச்சுற்றறிக்கையில் அரச கரும மொழிகள் தொடர்பான கொள்கையை நடைமுறைப்படுத்தும் பொருட்டு சகல அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண சபைகளின் பிரதான செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் ஆகியோரால் எடுக்கப்ட வேண்டிய நடவடிக்கைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 36/90 —** 1990 செப்டெம்பர் 10ம் திகதி வெளியிடப்பட்ட இச்சுற்றறிக்கை அரசகரும மொழிகள் கொள்கை மற்றும் உத்தியோகபூர்வ கடித கொடுக்கல் வாங்கல் தொடர்பான விடயங்கள் உள்ளடங்கும்.

**அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 36/89 —** 1989 யூன் 06ம் திகதி வெளியிடப்பட்ட இச்சுற்றறிக்கை ஊடாக அரசியலமைப்பின் IV அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரச கரும மொழிகள் தொடர்பான ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் பொருட்டு தாபனக் கோவையின் II அத்தியாயம் திருத்தப்பட்டுள்ளது.

**அமைச்சரவை பத்திரம் இல. 13/1748/520/01** அரசநிறுவனங்களை இன அடிப்படையில் அடையாளம் காண்பதைத் தவிர்த்து அமையப்பெற்றுள்ள பிரதேசத்தின் அடிப்படையில் அடையாளம் காணப்படுதல். 2014 ஜனவரி மாதம் 03 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவிற்கமைவாக 2014 ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கையின் அனைத்து அரச நிறுவனங்களுக்கும் மேற்குறிப்பிட்டவகையில் அடையாளம் காணப்படுவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**அமைச்சரவை பத்திரம் இல. 08/0681/326/005** "சிங்கள மொழிப் பதத்தால் மட்டும் அடையாளப்படுத்தப்பட்டுள்ள அரச நிகழ்ச்சித் திட்டங்களிலும் கருத்திட்டங்களிலும் தமிழ் மொழிப் பதங்களும் இடுதல் அவசியமானது." 2008 ஏப்ரல் 09ம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் கருத்திட்டங்களை அடையாளம் காண்பதற்காக உபயோகிக்கப்படும் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் தொகுக்கும் பொறுப்பு அரசகரும மொழித் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

# இணைப்பு –02

## ஆய்விற்கு ஏற்புடைய அமைச்சுக்கள்

| | |
|---|---|
| 1 | மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சு |
| 2 | பாராளுமன்ற அலுவல்கள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு |
| 3 | கமத்தொழில் அமைச்சு |
| 4 | பாதுகாப்பு அமைச்சு |
| 5 | உள்ளக அலுவல்கள், வடமேல் மாகாண அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு |
| 6 | காணி அமைச்சு |
| 7 | தபால், தபால் சேவை மற்றும் முஸ்லிம் அலுவல்கள் அமைச்சு |
| 8 | சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சு |
| 9 | சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சு |
| 10 | புத்தசாசன அமைச்சு |
| 11 | அனர்த்த முகாமைத்துவ அமைச்சு |
| 12 | மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும்  சமுதாய அபிவிருத்தி அமைச்சு |
| 13 | விசேட கடமைப் பொறுப்புக்கள் அமைச்சு |
| 14 | விஞ்ஞானம், தொழிநுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சு |
| 15 | கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சு |
| 16 | பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சு |
| 17 | மின்வலு மற்றும் மீள்புத்தாக்க வலு அமைச்சு |
| 18 | பேண்தகு அபிவிருத்தி மற்றும் வனஜீவராசிகள்அமைச்சு |
| 19 | கடற்தொழில் மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சு |
| 20 | விளையாட்டுத் துறை அமைச்சு |
| 21 | திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சு |
| 22 | போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு |
| 23 | நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சு |
| 24 | பிராந்திய அபிவிருத்தி அமைச்சு |
| 25 | தொழில், தொழிற்சங்க உறவுகள் அமைச்சு |
| 26 | சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சு |
| 27 | மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு |
| 28 | தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு |
| 29 | உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு |
| 30 | நீர்ப்பாசன மற்றும் நீர்வள முகாமைத்துவ அமைச்சு |
| 31 | வீடமைப்பு மற்றும் நிர்மாணத் துறை அமைச்சு |
| 32 | கைத்தொழில் மற்றும் வணிகம் பற்றிய அமைச்சு |
| 33 | பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு |
| 34 | துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சு |
| 35 | மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு |
| 36 | சர்வதேச வர்த்தக மற்றும் திறன்முறை அபிவிருத்தி அமைச்சு |
| 37 | வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு |
| 38 | வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு |
| 39 | தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சு |
| 40 | நீதி அமைச்சு |
| 41 | ஆரம்பக் கைத்தொழில் அமைச்சு |
| 42 | மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு |
| 43 | பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு |
| 44 | அரசாங்க தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சு |
| 45 | சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சு |
| 46 | கல்வி அமைச்சு |
| 47 | நிதி அமைச்சு |
| 48 | சுகாதாரம், போஷனை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு |
| 49 | உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு |